2014 ஆகஸ்ட் 8]

சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டதற்குப் பிறகு, அந்தந்த மாவட்டங்களிலே இடம் தேர்வு செய்யப்படுகிறது. அப்படித் தேர்வு செய்யப்படுகிறபோது, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

கல்வியியல் கல்லூரி

***36848—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி தொகுதியில் கல்வியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி தொகுதியில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.*

திரு. ஆர். ராமமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலில் உருவாக்கப்பட்ட புதிய தொகுதி விக்கிரவாண்டி. சென்ற ஆண்டிலே மாண்புமிகு முதல்வர்*

அவர்களுடைய அறிவிப்பால், உத்தரவால் உருவாக்கப்பட்ட புதிய வட்டம் விக்கிரவாண்டி. கடந்த சட்டமன்றத் தேர்தலிலே உருவாக்கப்பட்ட புதிய விக்கிரவாண்டி தொகுதியிலேயிருந்து, இந்தச் சட்டமன்றத்திற்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் முற்றிலும் புதியவன். எல்லா வகையிலும் புதிதாக இருக்கின்ற அந்தத் தொகுதிக்கு ஒரு புதிய கல்வியியல் கல்லூரி வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

கடந்த 3 ஆண்டுகளில் 37 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது பெருமைப்படத்தக்கது, வரவேற்கத்தக்கது என்று நான் கருதுகிறேன். ஆனால், எல்லா வகையிலும் பின்தங்கியிருக்கிற என் தொகுதியில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகூட இல்லையே என்பதிலிருந்தே நான் மிகப் பெரிய துரதிர்ஷ்டக்காரன் என்று எனக்குத் தெரிகிறது. எனவே, துரதிர்ஷ்டக்காரனான என்னை அதிர்ஷ்டக்காரனாக மாற்றுவதற்கு, ஒரு அரசுக் கல்லூரிகூட இல்லையே என்று வருத்தம் தோய்ந்து நிற்கக்கூடிய என்னுடைய தொகுதி மக்களுக்கு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று ஒரு அரசு கல்வியியல் கல்லூரியையாவது என்னுடைய தொகுதியிலே உருவாக்கித் தருவார்களா என்று தங்கள்மூலம் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொகுதி, மாமன்ற உறுப்பினரும் புதிதாக இருக்கக்கூடியவர் என்று கூறினார். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அம்மாவினுடைய அரசு புதிய புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிற காலகட்டத்தில், தன்னுடைய தொகுதியிலும் ஒரு புதிய கல்வியியல் கல்லூரி தொடங்க வேண்டும் என்ற ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர், தான் ஒரு துரதிருஷ்டக்காரன் என்று சொன்னார். அவர் துரதிருஷ்டம் என்ற சொல்லை நீக்கிவிட்டு ஆசை என்று சொல்ல வேண்டும். ஆசையை வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த வகையிலே ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்று

2014 ஆகஸ்ட் 8]

சொன்னால், National Council for Teacher Education-னுடைய அனுமதி பெற வேண்டும். தற்பொழுது தமிழகத்திலே 672 ஆசிரியர் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே அரசுக் கல்லூரிகள் 7 செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அரசு உதவிபெறும் கல்லூரிகள் 14 செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. சுய நிதிக் கல்லூரிகள் 651 செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆக மொத்தம், தமிழ்நாட்டிலே 672 ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.

மாணவர் சேர்க்கையைப் பொறுத்தவரை, 72,599 மாணவர்கள் சேர்க்கைக்கான அனுமதி இடங்கள் இருக்கின்றன. ஆனால் சென்ற ஆண்டு 65,583 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் 7,016 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அந்த வகையிலே பார்த்தால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், ஆசிரியர் கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய மாணவனுடைய ஆசையை நிவர்த்தி செய்கிற வகையிலே அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அரசின் நிதிநிலைக்கேற்ப எதிர்காலத்தில் அதைப்பற்றி அரசு ஆய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி அவர்கள்.

திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று மீண்டும் வேண்டுகோள் வைத்து, நன்றி தெரிவித்து அமர்கின்றேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சரோஜா அவர்கள்.

திருமதி பெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிருக்கு 33 சதவிகிதம் கொடுத்து மகத்தான சாதனை படைத்தவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரண தொண்டனையும் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகுபார்ப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்கள் முன்னேற பல திட்டங்கள் கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் கல்விப் புரட்சிக்கு வழிகாட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஏற்காடு தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அல்லது அரசு கல்வியியல் கல்லூரி ஒன்றினைத் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர். அந்தச் சட்டமன்றத் தொகுதி சேலம் மாவட்டத்தில் இருக்கின்றது. அது மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற தொகுதி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சி சார்பில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று துவங்குவதற்கு தயாராக இருப்பதாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியில் ஒரு தீர்மானம் இதுகுறித்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரி துவங்குவதற்கான இடமும் அங்கே அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றது. எனவே, தமிழக அரசு அனுமதி வழங்கினால், அங்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவங்குவதற்கு மதுரை மாநகராட்சி தயாராக இருக்கின்ற சூழ்நிலையில், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்றால் நிச்சயமாக அனுமதி கிடைக்கும். எனவே, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே ஒரு சட்டமன்ற வினாவினைத் தொடுத்தபோது, மதுரையில் பெண்கள் கல்லூரி மட்டும் இருக்கிறது என்றும், அங்கே இருபாலரும் படிக்கின்ற வகையில் கல்லூரி ஒன்று வேண்டும் என்றும் வினாவில் எழுப்பியிருந்தீர்கள். அதற்கு நான் பதில் அளிக்கும் வகையில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். சென்னை மாநகரம், கோவை மாநகரம் மற்றும் மதுரை மாநகரத்தில் தற்போது கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்கள் அதிகமாக சேர்ந்து படிப்பதற்கான ஆர்வம் அதிகமாக இருப்பது உண்மைதான். இந்நிலையில் ஏற்கெனவே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் அங்கு கல்லூரி திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இதனை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் அரசு கலைக் கல்லூரியில் இந்த வருடம்*

சேர்க்கைக்காக 11,000 மாணவர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அங்கு வகுப்பறைகளும், போதிய கட்டட வசதியும் இல்லாத காரணத்தினால், மாணவர்கள் கல்வி பயில சிரமப்படுகின்றனர். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே கூடுதலாகக் கட்டடங்கள் கட்டித் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டம் கல்வியில் முன்னேறிய மாவட்டமாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அங்கே 4 கல்லூரிகள் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அங்கே பட்ட மேற்படிப்பு மையம், பெரியார் பல்கலைக்கழகம்மூலம் தொடங்குவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதிலும் மாணவர்கள் பட்ட மேற்படிப்பு படித்து பயன் பெற்று வருகிறார்கள். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கல்லூரியிலிருந்து, கூடுதல் பாடப் பிரிவு தொடங்க வேண்டும் என்று கோரிக்கை வந்தது. அதனையும் ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற காலகட்டத்தில் அங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம் கட்ட வேண்டும் என்று கேட்பது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்தான். எனவே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நீங்கள் கட்டித்தருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்வியியல் கல்லூரிகளில் நியாயமான முறையில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேசமயத்தில் தனியார்

2014 ஆகஸ்ட் 8]

கல்வியியல் கல்லூரிகளில் கட்டணம் அவர்கள் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் நியாயமற்ற சூழ்நிலையில் வசூல் செய்கின்றார்கள். இத்தகைய சூழ்நிலையில் கல்வியியல் படிப்பு ஓர் ஆண்டாக இருந்தது, தற்போது 2 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டிருப்பதாக தகவல்கள் வந்துள்ளன. இதுகுறித்து மாண்புமிகு துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா என்றும், அந்தக் கட்டணங்களை முறைப்படுத்துவதற்கு தாங்கள் முன்வருவீர்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வியியல் கட்டணம் குறித்து இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே, ஆசிரியர் கல்வியியல் கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்குக் கட்டணம் நிர்ணயிக்கப்படாமல் இருந்தது உண்மைதான். இவற்றை அறிந்துதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.வி. பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டியின் மூலமாக அரசுக் கல்லூரி என்று சொன்னால் 2,250 ரூபாய், அரசு உதவி பெறும் கல்லூரிக்குக் கல்விக் கட்டணம் 10,000 ரூபாய், சுயநிதிக் கல்லூரிக்குக் கல்விக் கட்டணம் 41,500 ரூபாய், சுயநிதிக் கல்லூரியில் தரச்சான்று பெற்ற கல்லூரிக்கு 46,500 ரூபாய் என்று கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. நீண்டகாலமாக, அதுவும் சொல்லப்போனால் மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தக் கோப்புகள் இழுத்தடிக்கப்பட்டன. அவற்றை நிவர்த்தி செய்கின்ற விதத்தில், இதுபோன்ற சுயநிதிக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அதிகமாக கல்விக் கட்டணம் வசூலிக்கப்படக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்க வேண்டுமென்று உத்தரவு வழங்கினார்கள். அதன் அடிப்படையிலேதான், சென்ற ஆண்டு தமிழகத்திலே இருக்கக்கூடிய அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளுக்கும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, நியாயமான முறையிலே கல்விக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது கல்லூரியிலே இதுபோன்ற பிரச்சினை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால் அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆண்டுகள் கல்வியியல் படிப்பு கொண்டு வருவது குறித்து National Council for Teacher Education *ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறது. இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. புத்திசந்திரன் அவர்கள்.*

திரு. புத்திசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரை கோடி கழகத் தொண்டர்களுக்கு மட்டுமல்லாது தமிழகத்திலே இருக்கின்ற ஏழரை கோடி மக்களுக்கும் தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

நீலகிரி மாவட்டத்திலே படிக்கின்ற மாணவர்கள் கல்வியியல் படிப்பைப் படிக்க வேண்டுமென்று சொன்னால் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களுக்குச் சென்று படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நீலகிரி மாவட்டத்திற்கென்று, அங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு ஒரு கல்வியியல் கல்லூரியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் அதிகமாக வனங்கள் சூழ்ந்திருக்கின்ற பகுதியாக இருப்பதால், அது மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினால், அங்கு நிலம் கையகப்படுத்துவது என்பதில் சிரமமிருக்கிறது.*

2014 ஆகஸ்ட் 8]

அங்கு கல்வியியல் கல்லூரி அமைப்பதற்கு ஒரு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கையகப்படுத்துவதற்கு நிலம் எங்கிருக்கிறது என்று அடையாளம் கண்டு தெரிவிக்கின்றபட்சத்தில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள்.*

திரு. ஆர். சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மருங்காபுரி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இப்பகுதியில் வாழும் மக்கள் முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள். அவர்களுடைய குழந்தைகள் பட்டப் படிப்பு படிப்பதற்கு சுமார் 75 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருச்சிக்குச் செல்வதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எஃகுக் கோட்டையாக விளங்கும் மருங்காபுரி பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைவரும் உயர் கல்வி பெற வேண்டும். உயர் கல்வி பெற்றவர்களுடைய சதவீதத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சி அமைந்த 3 ஆண்டுகளில், 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கி சாதனை படைத்திருக்கிறார்கள்.*

அதோடுமட்டுமல்லாமல், 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளையும், 4 பொறியியல் கல்லூரிகளையும் தந்து, தமிழகத்தை உயர் கல்வியிலே ஒரு முன்னேறிய மாநிலமாக

உருவாக்க வேண்டுமென்று, இந்தியாவிலேயே ஒரு சிறந்த மாநிலமாக உருவாக்க வேண்டுமென்று, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அனுமதி அளித்தும், கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தந்தும் சிறப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதிக்கும் ஒரு கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இப்போது ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், கிராமப் பகுதியாக இருந்தால் 10 ஏக்கர் நிலம் தேவை என்ற நிலையை மாற்றி, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 5 ஏக்கர் இருந்தாலே போதும் என்ற ஆணையை வழங்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் அங்கு இடம் எது என்பதை அடையாளம் கண்டு அரசுக்குத் தெரிவிக்கின்றபட்சத்தில், எதிர்காலத்தில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். எனது மதுராந்தகம் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவந்த சார்பு நீதிமன்றத்திற்குக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்குக் குடியிருப்பு மற்றும் மின் கட்டமைப்புக்கு என 9.48 கோடி ரூபாய் அளித்துள்ள தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுராந்தகம் தொகுதியில் ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துக்கொடுத்தால் விழுப்புரம் மாவட்டம்,

திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களைச் சேர்ந்த மாணவிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் மதுராந்தகம் தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கடந்த ஆண்டில் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி வழங்கியிருக்கிறார்கள், நெம்மேலி சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி தொடங்க அனுமதித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விழுப்புரம் மாவட்டத்திலும் கல்லூரி தொடங்குவதற்காக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகளிர் கல்லூரி தொடங்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சென்ற ஆண்டுகூட காரிமங்கலம் தொகுதியில் அரசு மகளிர் கல்லூரி தொடங்கியிருக்கிறார்கள். வேப்பூர் பகுதியில் மகளிர் கல்லூரி துவங்குவதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். தமிழகத்தில் மொத்தம் 22 மகளிர் கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மகளிருடைய முன்னேற்றத்திற்காக பல்வேறுபட்ட நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தங்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 378, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*